S.T.C. No. : 62/2023

தேதி : 04.03.2024

பெயர் : தேவராஜ்

த.பெ. : சடையாண்டி

பு.சா : 1

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி</u>

1. நீங்கள் நடத்தி வரும் தொழிற்சாலை ஆயுதங்கள் சட்டத்தின்கீழ் நடத்தி வரும் தொழிற்சாலையா அல்லது ஜீ.எஸ்.டி கீழ்நடத்திவரும் தொழிற்சாலையா என்றால் ஜி.எஸ்.டியின் கீழ் நடத்திவரும் தொழிற்சாலை. உங்களைுடைய தொழிற்சாலை தீக்குச்சி கரிமருந்து தயாரிக்கும் தொழிற்சாலை அல்ல என்றால் சரிதான்.
2. வெளியில் ரெடிமெட் தீக்குச்சிகள்வாங்கி பேக்கிங் செய்யும் தொழில் செய்து வருகிறீர்கள் என்றால் சரிதான். நீங்கள் தொழில் செய்துவரும் கட்டிடம் சொந்த கட்டிடமா அல்லது வாடகை கட்டிடமா என்றால் வாடகை கட்டிடம். நீங்கள்தொழில் செய்துவரும் கட்டிடத்தின் உரிமையாளர் உடனான வாடகை ஒப்பந்த்ததை தாக்கல் செய்தால் தான் ஜி.எஸ்.டி கீழ் பதிவுசெய்வார்கள் என்றால் சரிதான். அந்த கட்டிடத்தின் உரிமையாளர் பெயர் என்னவென்றால் மணிகண்ட ராஜா.
3. அந்த கட்டிடமானது தோட்டிலோவன்பட்டியில் உள்ளது என்றால் சரிதான். நீங்கள் 7 வருடங்களுக்கு முன்பாக மணிகண்ட ராஜா நிறுவனத்தில் பணியாற்றி வந்தீர்கள் என்றால் இல்லை. நீங்கள் 7 வருடங்களுக்கு முன்பு என்னவேலை யாரிடம் பார்த்தீ◌ர்கள் என்றால் தோட்டிலோவன்பட்டியிலுள்ள பரமசிவம் என்பவரிடம் வேலை பார்த்தேன். நீங்கள் பணம்ட கொடுத்ததாக சொல்லும் தேதியிலிருந்து காசோலை பெற்றதாக சொல்லும் தேதிக்கு இடையிலான 5 மாத காலம் எதிரியிடம் நீங்கள் கேட்டதாகவோ, அவரை பார்த்ததாகவோ மனுவில் சொல்லவில்லை என்றால்சரிதான்.
4. மனுவில் 5 மாதங்களுக்கு பின்னர் எதிரியை அவருடைய வீட்டில் பார்த்ததாக சொல்லியுள்ளீர்கள் என்றால் சரிதான். நீங்கள் எதிரியை பார்க்க செல்லுவதற்கு முன்பாக பாா்க்க வருவதாக எதிரிக்கு எந்த தகவலும் சொன்னதாகமனுவில் இல்லை என்றால் சரிதான். அதே போன்று அவரை எந்த நேரத்தில் சந்தீர்கள் என்பது மனுவில் இல்லை என்றால் சரிதான். எதிரி காசோலையினை கொடுத்ததாக சொல்லப்படும் நாளில் அவருடன் வேறு சாட்சிகள் இருந்ததாக சங்கதிகள் இல்லை என்றால் சரிதான்.
5. நீங்களாக வீடு தேடிபோய் கேட்டிருக்கவிட்டால் எதிரி காசோலையினை கொடுத்திருக்க மாட்டார் என்றால்சரிதான். நீங்கள் எதிரியை வீட்டில் போய் பார்க்கும் போது என்ன செய்துகொண்டிருந்தார் என்றால் எதிரி சாப்பிட்டுகொண்டு இருந்தார். அதன்பிறகு எதிரி காசோலை

கேட்டுகொண்டதற்கிணங்க காசோலை வழங்கினார் என்றால் சரிதான். உங்கள் முன்னிலையில் காசோலையில் கையொப்பம் இட்டார் என்றால் சரிதான். காசோலை தொகை மற்றும் மற்ற சங்கதிகளை எதிரியே எழுதினார் என்றால் இல்லை. என் மகன் எழுதினார். எதிரி கொடுத்த காசோலை வெற்று காசோலை என்றால் சரிதான். உங்களை பையனை உங்களுடன் அழைத்துசெல்லவதாக மனுவில் சொல்லவில்லை என்றால் சரிதான். அந்த காசோலையினை யாரை வைத்து நீங்கள் நிரப்பி கொள்ளுங்கள் என்று எதிரி சொ்னனதாக சங்கதிகள் இல்லை என்றால் சரிதான்.

6. எதிரி உங்களுக்கு எந்த தேதியில் காசோலை கொடுத்தார் என்றால் 23.03.2023. நீங்கள் எந்த தேதியில் காசோலையினை வசூலுக்கு தாக்கல் செய்தீர்கள் என்றால் 27.03.2023. காசோலை என்ன காரணத்திற்காக திருப்பி வந்தது என்றால் போதிய பணமில்லை என்ற காரணத்திற்காக திருப்பபட்டது. பொதுவாக பழகி நண்பர்களின் காசோலையானதுதிருப்பி விட்டது என்றால் அவரிடம் சொல்வது பழக்கம் என்றால் சரிதான். நீங்கள் எதிரியிடம் காசோலை பணமில்லாமல் திருப்பி வந்ததாக சொன்ன சங்கதிகள் இல்லை என்றால் சரிதான்.
7. எதிரியின் பட்டாசு கடை எங்கே உள்ளது என்றால் எப்போதும்வென்றானில் உள்ளது. எதிரி எத்தனை ஆண்டுகளாக உங்களுக்கு தெரிந்துஅங்கு வியாபாரம் செய்து வருகிறார் என்றால் சுமார் 4 வருடம் காலம் இருக்கும். பட்டாசு தொழி்ல் செய்வதற்கும் உரிமம் வேண்டும் என்றால் சரிதான். அந்த உரிமமானது யார் பெயரில் உள்ளது என்று கேட்டு தெரிந்து கொண்டீர்களா என்றால் இல்லை.
8. அந்த பட்டாசு கடையின் உரிமமானது நீங்கள் சொன்ன மணிகண்ட ராஜா பெயரில் தான் உள்ளது என்ற விபரம் உங்களுக்கு தெரியாது என்றால் சரிதான். மணிகண்ட ராஜாவின் முகவரியும் எதிரி நடத்திவரும் பட்டாசு கடையின்முகவரியும் ஒரே முகவரியும் ஒரே முகவரி தான் என்று உங்களுக்கு தெரியாது என்றால் சரிதான். மணிகண்ட ராஜா தற்சமயம் ஊரில் இல்லை என்றால் வெளிநாட்டில் இருக்கிறார். மணிகண்ட ராஜாவிற்கும் எதிரிக்கும் இடையில் ஏற்பட்ட மனகசப்பின் காரணமாக மணிகண்ட ராஜாவிடமிருந்த எதிரியின் காசோலையினை உங்களிடம் கொடுத்து இந்தவழக்கினை தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் இல்லை.எதிரிக்கு கடன் கொடுக்குமளவிற்கு உங்களுக்குபொருளாதார வசதி கிடையாது என்றால் சரியல்ல. வசதி உள்ளது.
9. உங்களுக்கு பொருளாதார வசதியுள்ளது என்பதை காட்ட உங்களுடைய வங்கி பரிவர்த்தனைகளை தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் இல்லை. உங்களுடைய எந்த வரவு செலவுக்கான பதிவேடுகளை எதிரி கொடுத்ததாக சொல்லப்படும் தொகை அதில் வரவில்லை என்றால் சரிதான்.எதிரிக்கு உங்களிடம் கடன் வாங்கவேண்டிய கஷ்டகாலம எப்போதும் ஏற்பட்டது இல்லை என்றால் சரியல்ல. மணிகண்ட ராஜாவிடம்

கொடுத் தகாசோலை தவறாக பயன்படுத்தி தொடங்கப்பட்ட பொய் வழக்கு என்றால் சரியல்ல.

10. எதிரிக்கும் இந்தவழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றாலும் சட்டப்படி தள்ளுபடி செய்யவேண்டிய வழக்கு என்றாலும் சரியல்ல.

**Taken before me in open court in the presence of accused**
**and read over to the witness and**
**acknowledged by him/her to be Correct.**
Sd/ Tr. M. Kadarkarai Selvam
Judicial Magistrate No.I,
**Fast Track Court (ML) Kovilpatti.**